
# டாக்டர் ஹேமரின் சுயசரிதை



**டாக்டர். மெட். ரைக் கீர்ட் ஹேமர்** மே **17,1935** அன்று ஜெர்மனியின் மெட்மேனில் பிறந்தார். அவர் தனது குழந்தைப்பருவத்தை தனது தந்தைவழி தாத்தா பாட்டிகளுடன் கிழக்கு ஃபிரிசியாவில் கழித்தார். **1953**ஆம் ஆண்டில், அவர் டூபிங்கன் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், இறையியல் மற்றும் இயற்பியல் ஆகியவற்றைப் படிக்கத் தொடங்கினார். தனது **22** வயதில், இறையியலில் முதுகலைப் பட்டம் முடித்தார், பின்னர், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, வைத்தியம் புரியும் மருத்துவராக தனது தொழில்முறை உரிமத்தைப் பெற்றார். அடுத்த ஆண்டுகளில் அவர் ஜெர்மனியில் உள்ள பல்வேறு பல்கலைக்கழக சிகிச்சையகங்களில் மருத்துவப் பணி புரிந்தார்.

**1972**ஆம் ஆண்டில், டாக்டர்.ஹேமர் உள்மருத்துவத்தில் தனது நிபுணத்துவத்தை முடித்து டூபிங்கனில் உள்ள பல்கலைக்கழக சிகிச்சையகத்திலேயே புற்றுநோயாளிகளுக்குப் பொறுப்பேற்று கவனிக்கும் ஒரு இன்டர்னிஸ்டாகப் பணியாற்றத் தொடங்கினார். டூபிங்கனில் படிக்கும் போது சந்தித்து, திருமணம் செய்து கொண்ட தன் மனைவி டாக்டர். சிக்ரிட் ஹேமருடன் சேர்ந்து தன் தனியார் சிகிச்சையகத்திலும் மருத்துவம் புரிந்தார். டாக்டர்.ஹேமர் மருத்துவ சாதனங்களை கண்டுபிடிப்பதில் அபார திறமை பெற்றிருந்தார். மற்றவர்களுடன் சேர்ந்து, டாக்டர் ஹேமர் Hamer Scalpel எனப்படும் புற அதிர்ச்சிப்புண் ஏற்படுத்தாத அறுவைக்கத்தி (non traumatic scalpel) (சவரக்கத்தி போல் இருபது மடங்கு கூர்மையான), ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் சிறப்பு எலும்பு அறுக்கும் இரம்பம், உடலின் அமைப்பிற்கு ஏற்ப தானே மாறிக்கொள்ளும் மசாஜ் மேஜை ஆகியவற்றை கண்டுபிடித்து காப்புரிமம் பெற்றிருந்தார்.

டாக்டர் ஹேமரின் கண்டுபிடிப்புகள் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இத்தாலிக்குச் செல்வதற்கான நிதி வழிவகைகளை வழங்கின. அங்கு ரோமாபுரியின் சேரிகளில் உள்ள நோயாளிகளுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சையளிக்க திட்டமிட்டார். ஹேமர் குடும்பம் ரோமில் இருந்தபோது, ஆகஸ்ட் 18,1978 அன்று, தங்கள் மகன் டிர்க்கை **(Dirk)** சவோயின் இத்தாலிய இளவரசர் விக்டர் இமானுவேல் தற்செயலாக சுட்டுக் கொன்றார் என்ற அதிர்ச்சியூட்டும் செய்தியை அறிந்தனர். டிசம்பர் 7,1978 அன்று,காயங்களுக்கு இரையாகி டிர்க் தன் தந்தையின் மடியிலேயே உயிர் துறந்தார். டிர்க்கின் உடல் ரோமிலுள்ள பிரமிட்டில் உள்ள நகர சுவரின் கீழ் புதைக்கப்பட்டது.



டிர்க் இறந்த சில காலத்திற்குள்ளே, டாக்டர் ஹேமருக்கு விந்தகப் புற்றுநோய் (testicular cancer) இருப்பது கண்டறியப்பட்டது. அதுவரை எவ்வித தீவிர நோய்களாலும் பீடிக்கப்பட்டிராத டாக்டர் ஹேமருக்கு தனது புற்றுநோயின் தோற்றத்திற்கான காரணம் தனது மகனின் எதிர்பாராத இழப்புடன் நேரடியாக தொடர்புடையதாக இருக்கும் என்று அவர் அடிக்கோளினார். பின்னாளில், டாக்டர் ஹேமர் இந்த எதிர்பாராத அதிர்ச்சியை (conflict shock) டிர்க்கின் நினைவாக, "டி.எச்.எஸ் அல்லது டிர்க் ஹேமர் ஸின்ட்ரோம்" **(Dirk Hamer Syndrome)** என்று குறிப்பிடலானார்.

டிர்க்கின் மரணம் மற்றும் புற்றுநோயால் ஏற்பட்ட சொந்த அனுபவம் ஆகியவை டாக்டர் ஹேமரை ஒரு அசாதாரண அறிவியல் பயணத்திற்கு வழிநடத்தியது.

அச்சமயம் டாக்டர் ஹேமர் மியூனிக் பல்கலைக்கழகத்தில் உள்ள புற்றுநோய் சிகிச்சையகத்தின் தலைமை பயிற்சியாளராக இருந்ததால், அவரால் தனது புற்றுநோயாளிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொடர் கோவையை அலசி ஆராய முடிந்தது. இச்சோதனையின் அவர் கண்டறிந்தது யாதெனில் அவரைப் போலவே, அந்த புற்றுநோயாளிகள் ஒவ்வொருவரும் ஒரு வகையான எதிர்பாராத அதிர்ச்சியை (புற்றுநோய் கண்டறிவதற்கு முன்) அனுபவித்திருந்தார்கள். இக்கண்டுபிடிப்பை இன்னும் தெளிவுபட அறிய எண்ணி தனது ஆராய்ச்சியை மேலும் தொடர்ந்தார். உடலின் அனைத்து செயல்முறைகளும் மூளையில் இருந்து கட்டுப்படுத்தப்படுகின்றன என்ற கருதுகோளைப் பின்தொடர்ந்து, அவர் தனது நோயாளிகளின் மூளை ஸ்கேன்களை கூர்ந்து ஆய்ந்து அதை அவர்களின் மருத்துவ பதிவுகள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டு ஆராயலானார். குறிப்பிட்ட வகை "பிணக்கு அதிர்ச்சிக்கு" (conflict shock) இடையே ஒரு தீர்க்கமான தொடர்பு இருப்பதையும், அந்த அதிர்ச்சிகள் உடல் உறுப்புகளில் குறிப்பிட்ட அறிகுறிகளாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும், இவை அனைத்தும் மூளையுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் கண்டு அவர் பெருவியப்படைந்தார். மனதிற்கும் **(Psyche)** நோயுற்ற உறுப்புக்கும் **(diseased organ)** இடையில் மூளை **(Brain)** நடுவராக **(mediator)** பங்கு வகிப்பது அதுவரை எந்த ஆய்விலும் கண்டறியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நோயும், முற்றிலும் எதிர்பாராத வகையில் ஒரு தனிமனிதனைப் பற்றிக்கொள்ளும் ஒரு மன அதிர்ச்சி அல்லது பிணக்கு அதிர்ச்சியாலேயே **(conflict shock)** உருவாகிறது என்பதை டாக்டர் ஹேமர் நிறுவினார். இந்த எதிர்பாராத பிணக்கு அதிர்ச்சி ஏற்படும் தருணம், இந்த அதிர்ச்சி மூளையில் ஒரு குறிப்பிட்ட, முன்பே (இயற்கையால்) தீர்மானிக்கப்பட்ட ஒரு பகுதியை

தாக்கி, நைவுப்புண்ணை ஏற்படுத்தியது என்பது மூளை ஸ்கேனில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தென்பட்ட கூர்மையான பொது மைய வளையங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. (பின்னாளில் இப்புண் ஹேமர் ஃபோகஸ் **(Hamer Focus)** அல்லது எச்.எச் - ஹேமர்ஷெர் ஹெர்ட் **(HH - Hamerscher Herd)** என்று அழைக்கப்பட்டது) இந்த வளைய வடிவ நைவுப்புண்களை **(lesions)** டாக்டர் ஹேமர் மூளை ஸ்கேன் மூலம் கண்டுபிடிப்பதற்கு முன், கதிரியக்கவியலாளர்கள் அவற்றை இயந்திரத்தில் உள்ள தடுமாற்றத்தால் உருவாக்கப்பட்ட செயல்முறைக் குளறுபடி என்று கருதினர். ஆனால் கணினி டோமோகிராஃபி கருவிகளின் உற்பத்தியாளரான சீமென்ஸ் **(Siemens),** இந்த நைவுப்புண்கள் செயல்முறைக் குளறுபடி அல்ல என சான்றளித்தது. ஏனெனில் மீண்டும் மீண்டும் வெவ்வேறு கோணங்களில் டோமோகிராஃபி எடுக்கப்பட்டாலும், அந்த வளைய உருவங்கள் எப்போதும் ஒரே இடத்தில் தோன்றின, மாறவே இல்லை!

பிணக்க அதிர்ச்சியைப் **(conflict shock / DHS)** பெற்றுக்கொள்ளும் மூளை செல்கள் அந்த அதிர்ச்சியை ஒரு உயிர்வேதியியல் சமிக்ஞைகள் மூலம் சம்பந்தப்பட்ட உடல் உயிரணுக்களுக்கு அனுப்பிவிடுகின்றன. இதன் விளைவாக, மூளையின் எந்த பகுதி பாதிக்கப்பட்டது என்பதைப் பொறுத்து அது கட்டி வளர்ச்சியாகவோ, திசு கரைப்பாகவோ, அல்லது செயல்பாட்டு இழப்பாகவோ உடல் உயிரணுக்களில் வெளிப்படுகிறது.மனித உயிரினத்தின் வளர்ச்சியின் போது, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அச்சுறுத்தலான சூழ்நிலைகள் ஏற்படும் போது மூளையின் ஒவ்வொரு பகுதியும் உடனடியாக அதற்கு பதிலளிக்குமாறு இயற்கையாகவே வடிவமைக்கப்பட்ட காரணத்தினாலேயே குறிப்பிட்ட பிணக்கு அதிர்ச்சி குறிப்பிட்ட மூளைப் பகுதியையே மறுக்கமுடியாத படி சரிநுட்பமாகத் தாக்குகிறது என்பதை நாம் உணர முடியும். உதாரணமாக, மூளையின் முதலும் பழமையான பகுதியான மூளைத்தண்டானது ஆதிபிணக்கங்களான "இறப்பு - திகில் பிணக்கு" **(death fright conflict)** சுவாசம் தொடர்பான உறுப்புகளுடனும், "இனப்பெருக்க பிணக்கு" **(procreation conflict)** இனப்பெருக்கம் தொடர்பான உறுப்புகளுடனும், " கவளப் பிணக்கு" **(morsel conflict)** செரிமான உறுப்புகளுடனும் பிணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இதே போன்று, மூளையின் இளைய பகுதியான பெருமூளையானது மிகவும் மேம்பட்ட விஷயங்களின் பிணக்குகளான " பிரிவு பிணக்கு" **(separation conflict)** "ஆட்சி எல்லை பிணக்கு" **(territorial conflict)** ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நோயும் இரண்டு கட்டங்களாக வெளிப்படுகிறது என்பதையும் டாக்டர். ஹேமர் கண்டுபிடித்தார். அவை யாதெனில் - முதல் கட்டம்: பிணக்கு உயிர்ப்புடன் இருக்கும் கட்டம் **(CONFLICT ACTIVE PHASE)** இது உணர்ச்சி வயப்பட்ட மன உளைச்சலாக **(emotional distress)**, பசியின்மையாக, தூக்கமின்மையாக வெளிப்படுகிறது. இதன் பின்னர், பிணக்கு **தீர்க்கப்பட்டால் மட்டுமே**, குணமாக்கல் கட்டம் நிகழும். இரண்டாம் கட்டம்: குணமாக்கல் கட்டம் **(HEALING PHASE).** மனம், மூளை மற்றும் பாதிக்கப்பட்ட உறுப்பு ஆகியவை குணமாக்கல் கட்டத்திற்கு முன்னேறும் போது பல சமயங்களில்

சோர்வு, தலைவலி, அழற்சி **(inflammation)** வீக்கம், “நோய்த்தொற்றுகள்” மற்றும் வலியாக வெளிப்படுவதால் கடுமையானதாக இருக்கும்.

கருவியலில் உறுதியாக நங்கூரமிடப்பட்டும், பரிணாம தர்க்கத்திற்கு முற்றிலும் ஒத்திருந்த தன் கண்டுபிடிப்புகளை டாக்டர் ஹேமர் "புதிய மருத்துவத்தின் ஐந்து உயிரியல் சட்டங்கள்" என்று அழைக்கலானார். பல ஆண்டுகள் அரும்பாடுபட்டு, **40,000**க்கும் மேற்பட்ட நோயாளிகளின் நிகழாய்வுகள் மூலம் தனது கண்டுபிடிப்புகளை உறுதி செய்தார்.

டாக்டர் ஹேமரின் ஆராய்ச்சி முடிவுகள் வழக்கத்தில் இருந்த மருத்துவத்தின் பல அடிப்படை கோட்பாடுகளை முற்றிலும் நிலைகுலையச் செய்தது. மனம்,மூளை மற்றும் தொடர்புடைய உறுப்பு ஆகியவற்றின் அர்த்தமுள்ள இயற்கையான இரு திசைப் பயன் விளைவே நோய் என்ற டாக்டர் ஹேமரின் விளக்கமானது நோய் தற்செயலாகவோ அல்லது இயற்கையின் பிழையாலோ ஏற்படுகிறது என்ற பார்வையை மறுத்து வாதிட்டது.

சிறந்த அறிவியல் அளவுகோல்களுக்கு உட்பட்ட ஜெர்மன் நியூ மெடிசின் **(German New Medicine - GNM)** ஆனது புற்றுநோய் செல்கள் கேடு விளைவிப்பவை; நுண்ணுயிரிகளால் தீங்கு விளையும் நோய் தொற்றும் என்ற பழைய கட்டுக்கதைகளை தகர்த்தெறிந்தது. இதுமட்டுமல்லாது “தொற்று நோய்கள்”மற்றும் (தொன்றுதொட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாக கருதப்பட்ட) புற்றுநோய் கட்டிகள் உயிரினத்தைக் காக்க வடிவமைக்கப்பட்டவைகளே தவிர ( நமக்கு இன்று வரை கற்பிக்கப்பட்டாற்போல)அழிக்க வந்தன அல்ல என்பதை ஜீ.என்.எம் இனங்காட்டுகிறது. இதனால் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் அவற்றின் பயமுறுத்தும் பூதாகர வடிவத்தை இழந்து, ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே தன்னுள் இயற்கையாகவே பெற்ற அர்த்தமுள்ள உயிரியல் உயிர்வாழ்வை காப்பாற்ற வந்த நிகழ்வுகளாக கண்டுணரப்பட்டன.

அக்டோபர் **1981** இல், டாக்டர் ஹேமர் தனது ஆராய்ச்சி முடிவுகளை முனைவர் பட்டத்திற்கு பிந்தைய ஆய்வறிக்கையாக **டூபிங்கன் பல்கலைக்கழகத்தில்** சமர்ப்பித்தார். டாக்டர் ஹேமரின் கண்டுபிடிப்புகளை நிகழாய்வில் பரிசோதித்து மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு இந்த புதிய மருத்துவம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும் இந்த புதிய மருத்துவத்தால் நோயாளிகள் பயன்பெற வேண்டுமென்றும் எண்ணி ஆய்வறிக்கையை சமர்ப்பித்தார். ஆனால் அவரின் பெருவியப்பிற்கு இடமாக, பல்கலைக்கழக குழு அவரின் கண்டுபிடிப்புகளை நிராகரித்ததுடன் அவரது ஆய்வறிக்கையை மதிப்பாய்வு செய்யவும் மறுத்துவிட்டது. இது பல்கலைக்கழக சரித்திரத்திலேயே இதுவரை நிகழ்ந்திராத அதிசயம் என்றே கூறலாம்! இதுமட்டுமின்றி இன்னொரு ஆச்சரியமும் இருந்தது. தனது ஆய்வறிக்கை சமர்ப்பித்த சில நாட்களுக்குள்ளேயே டாக்டர் ஹேமர் தானே தனது கண்டுபிடிப்புகள் தவறானவை என ஒத்துக்கொள்ளுமாறு இறுதி எச்சரிக்கை விடப்பட்டது தான் அது. இதை அவர் செய்ய மறுத்தால் அவரது பணி ஒப்பந்தம் புதுப்பிக்கப்படமாட்டாது எனவும் எச்சரிக்கப்பட்டது. நன்கு

நிரூபிக்கப்பட்ட தன் அறிவியல் பூர்வ கண்டுபிடிப்புகளை கூறியதற்காக ஏன் தன்னை தன் சிகிச்சையகத்திலிருந்து விலக்கினார்கள் என்பது டாக்டர் ஹேமருக்கு புரியாத புதிராகவே இருந்தது! ஆனாலும் டாக்டர் ஹேமர் தன் கொள்கைப்பிடிப்பில் உறுதியாக இருந்தார். பதவி நீக்கம் செய்யப்பட்ட அவர் தனது தனிப்பட்ட சிகிச்சையகத்தில் தன்னை ஒடுக்கிக் கொண்டு தன் ஆய்வுகளை தொடரலானார். ஒரு தனிப்பட்ட கிளினிக் துவக்க அவர் பல முறை முயன்றும் பலரின் தொடர்ந்த ஒருங்கிணைந்த எதிர்ப்பால் துவக்க முடியாமல் போய்விட்டது. டாக்டர் ஹேமரின் நோயாளிகள் சுகாதார அதிகாரிகளுக்கு எழுதிய கடிதங்கள் பதிலளிக்கப்படாமலும் "பொருத்தமற்றது!" என்ற முத்திரையுடனும் திருப்பி அனுப்பப்பட்டன. இன்றளவும் இந்த அதிகாரிகளின் உறுதியான நிலைப்பாடு மாறவே இல்லை என்பது தான் அவலம்!

**1985** ஆம் ஆண்டில், **29** வருட திருமண வாழ்விற்குப் பிறகு, நான்கு குழந்தைகளை செம்மையாக வளர்த்த தாயான டாக்டர் சிக்ரிட் ஹேமர் இறந்தார். தனது மகனின் இறப்பின் சோகத்திலிருந்தும் மற்றும் சவோய் குடும்பத்தினரின் இடைவிடாத அச்சுறுத்தலில் இருந்தும் மீளாமலேயே உயிர் துறந்தார்.

டாக்டர் ஹேமரின் துன்புறுத்தலின் உச்சகட்டமாக, **1989**- இல் நீதிமன்றம் அவரை மருத்துவம் புரியக்கூடாது எனக்கூறி தண்டித்தது! (**தன் கண்டுபிடிப்புகள் தவறானவை பொய்யானவை என்று ஒருவராலும் இன்றளவும் நிரூபிக்கப்படாத நிலையிலும்**) **புற்றுநோயின் தோற்றம் குறித்த தனது கண்டுபிடிப்புகளை கைவிடாத காரணத்திற்காகவும், வழக்கத்தில் உள்ள மருத்துவ முறையின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாததற்கும் டாக்டர் ஹேமர் தனது 51-ஆம் வயதில், தனது மருத்துவ உரிமத்தை இழந்தார்.** தனது மருத்துவ உரிமம் பறிக்கப்பட்ட நிலையில் டாக்டர் ஹேமர் இப்போது மூளை ஸ்கேன்களைப் பெறவும் நோயாளிகளின் பதிவேடுகளைப் பெறவும் மற்ற மருத்துவர்களை நாடியிருக்க வேண்டிய நிலை உருவானது. இந்த நிலையிலும் அவர் தனது பணியை உறுதியாகத் தொடர்ந்தார். **1987**வாக்கில் டாக்டர் ஹேமர் ஏறக்குறைய **10,000**க்கும் மேற்பட்ட நிகழாய்வுகளை ஆய்ந்து, தான் கண்டுபிடித்த ஐந்து உயிரியல் சட்டங்களையும் மருத்துவத்தில் அன்றுவரை அறியப்பட்ட அனைத்து நோய்களுக்கும் விரிவாக்கி விளக்க வல்லவரானார். இதற்கிடையில், பத்திரிகைகளும் மருத்துவ நிறுவனங்களும் அவரையும் அவரது கண்டுபிடிப்புகளையும் தாக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தன. டேப்ளாய்ட் பத்திரிக்கையாளர்கள் மற்றும் மருத்துவ "வல்லுநர்கள்" சேர்ந்து டாக்டர் ஹேமரை ஒரு போலி மருத்துவராக, சுய-பிரகடனம் செய்யும் அதிசய குணப்படுத்துபவராக, ஒரு வழிபாட்டுத் தலைவராக, பகுத்தறிவற்றவராக புற்றுநோயாளிகளுக்கு வழக்கமான "உயிர் காக்கும்(!)" சிகிச்சைகளை மறுக்கும் ஒரு பைத்தியக்கார குற்றவாளியாக கேலியாக சித்தரித்தார்கள்.

**தொடர்ந்த ஒருங்கிணைந்த எதிர்ப்புகளின் விளைவாக டாக்டர் ஹேமரின் மருத்துவ கண்டுபிடிப்புகள் டாக்டர்களுக்கும் பெருவாரியான மக்களுக்கும் ஜீ.என்.எம் மூலம் பயன்பெற முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இன்று 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் லட்சக்கணக்கான நோயாளிகளுக்கு இந்த மனிதாபிமானமிக்க, துளையிட்டு புண்ணாக்காத ஜெர்மன் நியூ மெடிசின் ( ஜீ.என்.எம்) மூலம் சிகிச்சை அளிக்க மறுக்கப்பட்டது கொடுமையிலும் கொடுமை**!

**1997** ஆம் ஆண்டில், முறையான மருத்துவ உரிமம் இல்லாமல் மூன்று பேருக்கு இலவச மருத்துவ தகவல்களை வழங்கியதற்காக டாக்டர் ஹேமர் கைது செய்யப்பட்டு **19** மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இதற்கு முரணாக, **1991**ஆம் ஆண்டில், பதின்மூன்று வயதேயான டிர்க்கை கொன்ற சவோயின் விக்டர் இமானுவேலுக்கு ஆயுதத்தை சட்டவிரோதமாக வைத்திருந்ததற்காக வெறும் **6** மாத தகுதிகாண் தண்டனை மட்டுமே வழங்கப்பட்டது. டாக்டர் ஹேமர் கைது செய்யப்பட்டிருந்த போது, காவல்துறையினர் ஹேமரின் நோயாளிகளின் கோப்புகளைத் தேடினர். **அதன் பிறகு டாக்டர் ஹேமரிடம் வைத்தியம் (ஜீ.என்.எம் மூலம்) பெற்ற 6500 (இறக்கும் தருவாயில் புற்றுநோய் முற்றிய நிலையில் உள்ள) நோயாளிகளில் 6000 பேர் ஐந்து ஆண்டுகள் கழித்தும் உயிருடன் இருக்கும் உண்மை விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞர் வாயிலாகவே அறியப்பட்டது. இதனால் டாக்டர் ஹேமரை எதிர்த்தவர்கள் வாயிலாகவே ஜெர்மன் நியூ மெடிசினின் துள்ளியமான வெற்றி விழுக்காட்டின் புள்ளிவிவரங்கள் வெட்டவெளிச்சமானதுதான் வேடிக்கையான உண்மை**.1986 மற்றும் **1994**ஆம் ஆண்டுகளில் நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட நிலையிலும், இன்றுவரை, டூபிங்கன் பல்கலைக்கழகம் டாக்டர் ஹேமரின் அறிவியல் பூர்வ கண்டுபிடிப்புகளை சோதிக்க மறுக்கிறது விந்தையானது. இதேபோல், மருத்துவர்களாலும் பேராசிரியச் சங்கங்களாலும் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட நிலையிலும் மருத்துவமுறை ஜி.என்.எமை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.

செப்டம்பர் **9, 2004** அன்று, டாக்டர் ஹேமர் மறுபடியும் ஸ்பெயினில் உள்ள அவரது வீட்டில் கைது செய்யப்பட்டார். புகலிடம் பெற்ற குற்றவாளியைத் திரும்பவும் சம்பந்தப்பட்ட அயல்நாட்டிடம் ஒப்படைக்க ஒரு ஐரோப்பிய ஒப்படைப்பு உத்தரவின் பெயரில் டாக்டர் ஹேமர் பிரான்ஸ் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டார். அங்கு அவர் பிரெஞ்சு சிறை ஃப்ளூரி-மெரோகிஸில் அடைக்கப்பட்டார். இங்கு அவருக்கு தகுதிகாண் தண்டனை இல்லாமல் நேரடியாக மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர் மீதான குற்றச்சாட்டுகள்: "சட்டவிரோத மருத்துவ முறையில் உடந்தை மற்றும் மோசடி!". இதுமட்டுமின்றி அவரின் வெளியீடுகள் பிரெஞ்சு மொழியில் கிடைத்ததன் காரணமாக பல பிரெஞ்சு குடிமக்கள் உயிரிழந்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் உண்மை யாதெனில் டாக்டர் ஹேமர் இறந்த எந்தவொரு

நபரையும் அறிந்ததும் இல்லை அவர்களிடம் நேரில் பேசியதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிப்ரவரி **2006** இல் நேர்மையற்ற குற்றச்சாட்டுகளின் பெயரில் சிறையில் தள்ளப்பட்ட அவர் விடுவிக்கப்பட்டார்.

மார்ச் **2007** இல், டாக்டர் ஹேமர் தனது ஸ்பானிஷ் நாடுகடத்தலை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார். அதனால் அவர் நார்வே சென்றார். அங்கு அவர் தனது வாழ்க்கையின் லட்சியப்பணிகளை எவ்வித தொல்லையும் இன்றி பாதுகாப்பாகத் தொடர்ந்தார். அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டு, பின் ஜூலை **2, 2017** அன்று, தனது **82-**ஆம் வயதில், சாண்டெஃப்ஜோர்டில் உள்ள தனது இல்லத்தில் காலமானார். தனது அன்பு மனைவி டாக்டர் சிக்ரிட்டை டாக்டர் ஹேமர் மணந்த இடமான ஜெர்மனியின் எர்லாங்கனில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது.

**சாரம்: www.learninggnm.com**